செ.வெ.எண்: 27/2021 நாள்: 18.08.2021

# பத்திரிக்கை செய்தி

**அகரமுதலிஇயக்ககத்தின் "தூயதமிழ்ப்பற்றாளர்பரிசு"**

**விண்ணப்பங்கள்வரவேற்கப்படுகின்றன**

**கடைசிநாள்ஆகத்து 31, 2021**

நடைமுறையில் மக்களிடம் பேச்சு வழக்கிலும், அனைத்து இடங்களிலும் பிறமொழிக்கலப்பில்லாமல் எங்கும் எதிலும் தூய தமிழைப் பயன்படுத்துவோரை ஊக்கப்படுத்தும் வகையில், தமிழ் நாடுஅரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம் வழியாகப் பரிசுத் திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் உலகம் முழுவதிலிருந்தும் 3 தூயதமிழ்ப்பற்றாளர்களைத் தெரிவு செய்து அவர்களைப் பெருமைப்படுத்தும் வகையில் ஒவ்வொருவருக்கும் தலா உரூபா 5000/- (உரூபாஐந்தாயிரம்மட்டும்) பரிசுத் தொகை வழங்கப்படவுள்ளது.

பரிசுத்தொகையைப் பெறுவதற்கு விருப்பமுள்ள தூய தமிழ்ப்பற்றாளர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தைச் சொற்குவை.காம் (www.sorkuvai.com)என்ற வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, நிறைவு செய்து patralarparisu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது அஞ்சல் வழியாகவோ "இயக்குநர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம், நகர்நிருவாக அலுவலக வளாகம், முதல் தளம், எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்.ஆர்.சி.நகர், சென்னை - 600 028" என்ற முகவரிக்கு 31.08.2021ஆம் நாள் மாலை 5.00 மணிக்குள் கிடைப்பது போல் அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும், விண்ணப்பிப்பவரின் தூயதமிழ்ப்பற்றை உறுதி செய்து வழங்கும் நற்சான்றிதழ்களையும் இணைத்து அனுப்ப வேண்டும். அத்துடன் நற்சான்று அளிக்கும் தமிழறிஞர்களின் ஒருபக்க அளவிலான வாழ்க்கைக்குறிப்புகளையும் (Bio-data) இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். இப்போட்டியில் கலந்து கொள்வதற்கு அகவை வரம்போ, கல்வித்தகுதியோ கிடையாது. யார்வேண்டுமானாலும் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பு: உரிய சான்றுகளுடன் முழுமையாக நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தென்காசி.**